பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 31 செவ்வாய்க்கிழமை 16.08.2022 கதிர் 284

இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் உத்தேச அரசியல் தந்திரோபாயத் திட்டம் குறித்து சில விடயங்களை தமது அரசியல் உய்த்தறிவின் அடிப்படையில் வெளியிட்டிருக்கின்றார் மனோ கணேசன் எம்.பி. 2019 நவம்பரில் 2

# புலம்பெயர் அமைப்புகளை சந்தித்து உரையாடத் தயார்



## அதற்கான சூழ்நிலையை அரசு உடனே உருவாக்கவேண்டும் என்கிறார் மனோ

இலங்கையில் தற்போது ஆட்சியில் இருக்கும் ரணில் நிர்வாகம், உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ், ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் திராவிட ஈழ மக்கள் சம்மேளனம் ஆகிய ஆறு அமைப்புக்கள் மீதான தடையையும், 316 தனிநபர்களுக்குமான தடையையும் நீக்கியுள்ளது. இந்நடவடிக்கையை நான் வரவேற்கின்றேன். ஆனால், தடை நீக்கம் மாத்திரம் அவர்க ளைத் திருப்திப்படுத்தப் போவதில்லை.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். 2

## நேருக்கு நேர் மோ. சைக்கிள்கள் மோதியதில் இளைஞர் உயிரிழப்பு

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

பிலியந்தலை, கோரக்காபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த இளைஞன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பொகுந்தர பிரதேசத்தில் உள்ள வீதியொன்றில் சட்ட விரோதமாக மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடச் சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

அங்கு சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று தற்போது காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றைய மோட்டார் சைக்கிளை பொகுந்தர பிரதேசத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் 4

## லபுக்கலையில் பஸ் தடம் புரண்டு விபத்து



நுவரெலியா பகுதியிலிருந்து லபுக்கலை பகுதியை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று நேற்றுமுன்தினம் மாலையில் நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் லபுக்கலை மேற்பிரிவு பகுதியில் வீதியை விட்டு விலகி. தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து ஏற்படும் போது பஸ்ஸில் 30ற்கும் 2

## மீண்டும் மின்வெட்டு 3 மணி நேரமானது!

நாளாந்தம் 03 மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படலாம் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் இன்று முதல் 19ஆம் திகதி வரை தினமும் 3 மணி நேரம் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்த பொது பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதற்கட்ட பணிகளில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று வரை ஒரு மணித்தியாலமும் நேரம் 20 நிமிடங்களுக்கு மட்டுமே மின்வெட்டு அமுலில் உள்ளது. நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதல் கட்ட உற்பத்தி நடவடிக்கைகள் 4

## அவசரகால நிலை 27 இல் காலாவதி!

இம்மாதம் 27ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள அவசரகாலச்சட்டம் இனிநீடிக்கப்படாது என்ற நிலைமை காணப்படுகின்றது.

கடந்த மாதம் 27ஆம் திகதி நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது ஒரு மாதம் வலுவில் இருக்கும்.

தற்போது நாடாளுமன்றம் 29ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 27ஆம் திகதியுடன் நிறைவடையும் அந்தச் சட்டத்தை நீடிக்க வேண்டுமெனில் மீண்டும் அதற்கிடையில் நாடாளுமன்றின் ஒப்புதலைப் பெற வேண்டியது 2

## இந்தோனேஷியாவுக்கான தூதராகிறார் கொலம்பகே



ஐந்து அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் மற்றும் வெளிநாட்டு தூதுவர் ஒருவரை நியமிக்க உயர்பதவிகள் பற்றிய குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய இந்தோனேஷியாவுக்கான இலங்கை தூதுவராக அட்மிரல் (பேராசிரியர்)ஜயநாத் கொலம்பகேவை நியமிக்க 2

## சிங்கப்பூரில் கோட்டவின் ஹோட்டல் கட்டணம் ரூபா 6 கோடி 70 லட்சமாம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தங்கியிருந்த காலப்பகுதியில் ஆறு கோடி எழுபது லட்சம் ரூபாவை ஹோட்டல் கட்டணமாக செலுத்தினார் என தகவலறித்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் கடந்த 11ஆம் திகதி தாய்லாந்து செல்லும் வரை சிங்கப்பூரில் உள்ள மரினா பே சாண்ட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்தனர்.

ஹோட்டலின் தங்குமிட கட்டணமாக செலவிடப்பட்ட ஆறு கோடி எழுபது லட்சம் ரூபாவை 'அவன்ட் கார்ட்' நிறுவனத்தின் உரிமையாளர் நிஷ்ங்க சேனாதிபதி செலுத்தியுள்ளார் 4

## தமிழில் தேசிய கீதம் இசைப்பதை அமைச்சரவை நேற்று அங்கீகரிப்பு

### அமைச்சர் டக்ளஸின் கோரிக்கை ஏகமனதாக ஏற்பு



தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவது உத்தியோகபூர்வமானது என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியமையை அமைச்சரவைநேற்று ஏற்றுக்கொண்டது.

நாட்டின் பன்மைத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடும் அமைய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை 2

## இனி இது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடந்த தேர்தலில் வெற்றி பெற்று கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுக் கொண்ட ஜனாதிபதிப் பதவியின் மிச்சக் காலத்தையே ரணில் இப்போது தொடர்கின்றார்.

அதன்படி 2024 ஒக்டோபர் வரை – அதாவது இன்னும் இரண்டு வருடங்களும் இரண்டு மாதங்களும் ரணில் பதவியில் இருக்க முடியும். அதுவரை அவர் பதவியில் தொடர்வார் என்றுதான் பலரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அவர் வேறு விதமாக வியூகம் வகுக்கிறார் என்று கோடி காட்டியுள்ளார் மனோ கணேசன்.

2024 ஒக்டோபரிலும் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக மீட்டு விட முடியாது என்பதுதான் பலரின் கணிப்பு. அதற்கிடையில் இருக்கின்ற வசதிகள், உதவிகளை எல்லாம் ஒன்று திரட்டிப் பயன்படுத்தி, அடுத்த ஓராண்டுக்குள் தற்காலிகமாகவேனும் நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்தியமை போன்ற ஒரு நிலையை எட்டச் செய்வதற்கு – அல்லது அப்படிக் காட்டுவதற்கு – ரணில் காய் நகர்த்துகிறார் என மனோ கணேசன் கருதுகிறார்.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் படி, ஒரு ஜனாதிபதியின் முதலாவது பதவிக்காலத்தில் நான்காம் ஆண்டு முடிந்த பின்னர் எந்த சமயத்திலும் முன்கூட்டியே ஒரு ஜனாதிபதித் தேர்தலை அந்தப் பதவியில் இருக்கும் ஜனாதிபதி நடத்த முடியும். அதன்படி 2023 நவம்பர் 19 ஆம் தேதிக்கு பின்னர் எந்த சமயத்திலும் முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை ரணில் விக்கிரமசிங்க அறிவிக்க முடியும். ஏற்கனவே 74 வயதை எட்டிவிட்ட ரணில் விக்கிரமசிங்க இயன்ற விரைவில் ஒரு தேர்தலை நடத்தி தமக்கு அடுத்த ஐந்து வருட ஆட்சியை உறுதி செய்ய விரும்புகிறார் என்று அவதானிகள் கருதுகின்றனர். ஆகவே, 2023 நவம்பரோடு ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்று, தமது வெற்றியை உறுதிப்படுத்த ரணில் இப்போது இருந்தே திட்டம் தயாரித்துச் செயல்படுகிறார்.

அவருக்கு ஆட்சி அதிகாரத்தில் முண்டு கொடுத்து நிற்கும் மொட்டுக் கட்சியைப் பொறுத்தவரை அதன் அதிகாரம் மெல்ல மெல்ல ராஜபக்ஷ ஜூனியரான நாமல் ராஜபக்ஷவின் கைகளுக்கு மாறிக் கொண்டிருக்கின்றது.

நாமலைப் பொறுத்தவரை 2023 அல்லது 2024 இல் நடைபெறக்கூடிய ஜனாதிபதிதேர்தல்வயதில் இளையவரான தமக்கு பொருந்தி வராது என்ற எண்ணம் உள்ளது. அதனால் அதற்கு அடுத்த ஜனாதிபதி தேர்தலையே அவர் இலக்கு வைக்கின்றார்.

அதற்கிடையில் பொதுஜன பெரமுனவில் இருந்து ஒருவரோ அல்லது சஜித் பிரேமதாஸாவோ ஜனாதிபதியாகிவிட்டால், தான் அந்த ஜனாதிபதியின் இரண்டு பதவிக்கால ஆட்சி முடியும் வரை காத்திருக்க வேண்டும் என்ற யதார்த்தத்தை நாமல் ராஜபக்ஷ புரிந்து கொண்டுள்ளார்.

ஆகவே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2023 இறுதியிலோ அல்லது 2024 இறுதியிலோ நடக்கும் போது அதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதையே நேரடியாகவோ மறைமுகமாகவோ நாமல் ராஜபக்ஷ விரும்புவார் என்று கூறப்படுகிறது. அந்தத் தேர்தலில் ரணில் வெற்றி பெற்றாலும், வயது மூப்பு மற்றும் காரணங்களினால் அதற்கு அடுத்த தேர்தலுக்கு அவர் தமக்குச் சவாலாக இருக்க மாட்டார் என்று நாமல் தரப்பு கருதுகிறது.

இத்தகைய பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை அறிவித்து, அதில் தான் களமிறங்குவதற்கான வியூகங்களை வகுக்கத் தயாராகிறார் என்பது மனோ கணேசனின் கணிப்பீடு. இந்தச் சந்தர்ப்பத்தைத் தமது வெற்றிக்காகப் பயன்படுத்த ரணில் முன்னெடுக்கும் தந்ரோபாயங்களை தமிழர் தரப்பு தங்களுக்குச் சாதகமாகவும் மாற்றிக் கொள்வது வரலாற்று வாய்ப்பு என மனோ கணேசன் கருதுகிறார்.

எனக்கு என்னவோ அவரின் இந்த உய்த்தறிவில் ஆழமான – யதார்த்தமான – விடயங்கள் இருக்கின்றன என்றே படுகின்றது.

அடுத்த ஆண்டு இறுதியில் – அதாவது ஒரு வருடம் முற்கூட்டியே – நேரத்துடன் ஜனாதிபதித் தேர்தலை நடத்தித் தமது பதவியைத் தொடர்ந்து 5 வருடங்களுக்கு உறுதிப்படுத்த அவாப்படும் ரணிலின் ஆசையை தமிழர் தரப்பு சரியான வியூகம் வகுத்து தங்களுக்கும் ஏற்றதாகவும் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குசும்புத்தனமாக ரணிலோடு முரண்படுவதை விடுத்து, அரசியல் மேதாவிலாசத்தோடு நடந்து கொள்வது தமிழர் தலைவர்களின் பொறுப்பு.

– மின்னல் –

- - - - - - - - - - - - - - - - - -

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:–

இலங்கையின் 52 பில்லியன் டொலர் கடன் சுமை, நாட்டை நடத்த மாதாந்த 500 மில்லியன் டொலர் தேவை ஆகிய வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்துள்ள அனைத்து தமிழ், சிங்கள மக்களின் ஒத்துழைப்புகளை நாம் நாட வேண்டும். இதற்காகக் காலதாமதம் செய்யாமல், இந்நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலும், ஊழலற்ற நிதி நிர்வாகம் தொடர்பிலும் ஒரு குறைந்தபட்ச பொதுக் கோட்பாடுகளை இலங்கை அரசு புலம்பெயர் இலங்கையர்களை நோக்கி அரசின் உத்தரவாதமாக அறிவிக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் தமிழ் அமைப்புக்கள் மட்டுமல்ல, இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்துள்ள சிங்கள மற்றும் அனைத்து மக்களது அமைப்புக்களுடனும் சென்று உரையாட நான் தயாராக இருக்கின்றேன். ஒரு பக்கம் தமிழர் என்ற முறையிலும், மறுபுறம் தெற்கில் சிங்கள மக்கள் வாழும் கொழும்பு மாவட்ட எம்.பி. என்ற முறையிலும் நான் இந்த பாத்திரத்தை வகிப்பது பொருத்தமானது என நம்புகின்றேன். அரசில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதை விட இதுதான் பிரயோஜனமானது எனவும் நான் நம்புகின்றேன்.

இன்று நாம் உலக நாடுகளிடம் கையேந்தி கொண்டு இருக்கின்றோம். ஆனால், இந்தியாவைத் தவிர எவரும் எமக்கு உதவில்லை. இந்திய மக்களின் வரிப்பணம் மூலமான இந்த உதவிகள் இன்னமும் எவ்வளவு நாளைக்குக் கிடைக்கும் எனத் தெரியவில்லை. சர்வதேச நாணய நிதி, உலக வங்கி ஆகியவை ஒதுங்கியே இருக்கின்றன.

அவர்களிடம் முன்வைக்கும் சமூக பொருளாதாரத் திட்டம் என்ன? ஜனாதிபதி பதவி ஏற்று பல வாரங்கள் ஆகியும் இவை எவையும் இன்னமும் நடைபெறவில்லை. இந்நிலையில், பழைய அடிப்படைகளில் இருந்து மாறி, புதிய முறையில் பார்க்க, சிந்திக்க முடியுமானால், நாம் உலகம் முழுக்க வாழும் நமது நாட்டு மக்களிடம், தாய் நாட்டுக்கு உதவுங்கள் எனக் கோர முடியும்.

உலகம் முழுக்கப் புலம்பெயர்ந்துள்ள அனைத்து தமிழ், சிங்கள இலங்கையர்கள் சுமார் 25 இலட்சம் பேர் வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவரும் மனமுவந்து நாட்டுக்கு உதவக்கூடிய அளவில் அவர்களது நம்பிக்கையை பெறுவது நாட்டின், நாட்டு அரசின் கடமை. இந்நாட்டில் வாழ முடியாமல், வெளிநாடுகளுக்கு போய் விட்ட இவர்களுக்கு நாடு நல்ல திசையில் மாறுகின்றது என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

ஆனால், அவற்றுக்கு முன்நிபந்தனைகள் உண்டு. புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் குறிப்பாக நாட்டின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் உத்தரவாதங்களை எதிர்பார்ப்பார்கள். புலம்பெயர்ந்துள்ள சிங்கள மக்கள் குறிப்பாக தமது உதவிகள் ஊழல், வீண்விரயம் ஆகியவற்றை செய்யும் அரசியல்வாதிகளின் கைகளுக்கு போய்விடக்கூடாது என்பது தொடர்பில் உத்தரவாதங்களை எதிர்பார்ப்பார்கள்.

இந்நாடு சிங்கள, பௌத்த நாடு என்ற அடிப்படை மாற வேண்டும். இந்நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு என்ற அடிப்படை ஏற்கப்பட வேண்டும். இந்நாடு மதச்சார்பற்ற நாடாக மாறவும் வேண்டும். இலங்கையர் என்ற அடையாளம் மேலெழும்ப வேண்டும். அதேபோல் வெளிநாட்டில் இருந்து வரும், ஒவ்வொரு டொலரும், பவுண்டும், யூரோவும் நாட்டின் தேவைகளுக்காக வெளிப்படை தன்மையுடன் கூடிய பொறுப்பு கூறலுடன் பயன்படுத்தப்பட வேண்டும். இவை பற்றிய குறைந்தபட்ச பொதுக் கோட்பாடுகளை உத்தரவாதமாக இலங்கை அரசும், எதிர்க் கட்சிகளும் அறிவிக்குமானால், இது சாத்தியப்படலாம் – என்றார்.

- - - - - - - - - - - - - - - - - -

## அவசரகால நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவசியமாகும். ஆனால் தற்போது 27 ஆம் திகதிக்கு முன் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

எனவே, ஓகஸ்ட் 27ஆம் திகதியுடன் அவசரகால நிலை தானாகச செயலிழக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- - - - - - - - - - - - - - - - - -

## லபுக்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்பட்டோர் பயணித்துள்ளதாகவும், விபத்தின் போது, 4 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த 4 பேரும், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்தவர்களில் சிறுவர்களும் அடங்குகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பஸ் சாரதிக்கு வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதால் இந்த விபத்து நேர்ந்ததாகத் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை நுவரெலியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

- - - - - - - - - - - - - - - - - -

## இந்தோனேஷியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதியான ஜயநாத் கொலம்பக பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் வெளிவிவகார அமைச்சின் செயலாலராக இருந்தார்.

விவசாயத்துறை அமைச்சின் செயலாளராக எம்.பி.ஆர் புஷ்பகுமாரவின் நியமனத்திற்கும், வனவிலங்குகள் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஆர்.எம்.சி.எம் ஹேரத்தின் நியமனத்திற்கும், நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளராக எம்.சிறிவர்தனவின் நியமனத்திற்கும் உயர்பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் சுகாதாரத்துறை அமைச்சின் செயலாளராக எஸ்.ஜே.எஸ்.சந்திர குப்த, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சின் செயலாளராக ஆர்.பி.ஏ. விமலவீர ஆகியோரின் நியமினத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - - - - -

## தமிழில் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் சுதந்திர தின ஏற்பாடுகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே இந்தத் விடயம் வலியுறுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தற்போதைய ஜனாதிபதியின் நல்லெண்ண வெளிப்பாடாக சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழிலும் பாடப்பட்டமையைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்திலும் அந்த நடைமுறையை பின்பற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கடற்றொழில் அமைச்சரின. இந்த வேண்டுகோள் அமைச்சரவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

பன்மைத்துவம், சமத்துவம், சம உரிமை போன்றவை கடந்த காலங்களில் கொள்கையளவில் மாத்திரம் இருந்தமையும் நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு காரணமாக இருந்தது. எதிர்காலத்தில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் மனப்பூர்வமாக உணர்ந்துகொள்ளும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினார் என்று கடற்றொழில் அமைச்சு நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.


## இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளிநாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்ச்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும்போது தான் தொழில் தகமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் (welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் (Hospitality workers) உலகின் பல நாடு களில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய jananayakam.associates@gmail.com என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதியாக நடக்கத் தயாரா?

நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்கு முதலில் கள யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். நிதர்சனங்களை உணர்ந்து ஏற்றுக் கொள்ளாமல், கனவுலகில் சஞ்சரித்தபடியே, மனவுலகின் தவறான கற்பிதங்களோடு, விடயங்களை அணுகினால், நெருக்கடிகளில் இருந்து மீள முடியாது.

பொருளாதார வீழ்ச்சியில் மோசமாகச் சிக்குப்பட்டு மீண்டுவர முடியாமல் அடிபட்டுப் போயிருக்கும் இலங்கைக்கும் இந்த விடயம் பொருந்தும்.

இதனைத்தான் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் வெளிப்படையாக எடுத்துரைத்திருக்கின்றார். அவர் நிதர்சனங்களைப் பேச முற்படுகின்றார். ஆனால் எப்போதுமே 'யதார்த்தவாதி வெகுசன விரோதி' என்பதுதான் நடைமுறை நிலைமை. ஆகையினால் வெளிப்படையாகக் கருத்து வெளியிட்ட – உண்மைகளைப் பேசிய – மனோ கணேசனைத் தென்னிலங்கைப் பேரினவாதம் பிய்த்து உதறும் என்று எதிர்பார்க்கலாம்.

நாடு தானாகவே மீண்டெழ முடியாத பொருளாதாரப் பெரு வீழ்ச்சிக்குள் வீழ்ந்து விட்டது. இந்திய மக்களின் வரிப் பணத்தினாலான உதவி இனியும் எவ்வளவு நாள்களுக்கு என்பது கேள்விக்குறி. சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் அமானுஷ்ய அமைதி பேணுகின்றன. பிறநாடுகளும் மூச்சு விடும் அளவுக்குக் கூட உதவுவனவாக இல்லை. இந்தச் சூழ்நிலையில் நாட்டின் எதிர்காலமே இருள் சூழ்ந்து கிடக்கின்றது.

இதுதான் களயதார்த்தம். இலங்கையிலிருந்து சென்று பூமிப் பந்தெங்கும் குடியேறி வாழும் இருபத்தியைந்து லட்சம் தமிழ், சிங்கள மக்களின் உதவியை உரிமையோடு பெற்றுக் கொள்வதுதான் மீட்சிக்கான ஒரே வழி என்பதை மிகத் தெளிவாகவும் துலக்கமாகவும் சுட்டுகின்றார் மனோ கணேசன்.

அந்தக் கள யதார்தங்களை எடுத்துரைக்கும் அவர், அப்படித் தாராள உதவிகளை நம் மக்களிடமிருந்து நாடு பெற்றுக் கொள்வதற்கான நிதர்சனங்களையும் அடுக்குகின்றார்.

அந்தப் புலம்பெயர் மக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும், பங்களிப்பையும் உரிமையுடன் பெறுவதற்கு என்னென்ன செய்யப்பட வேண்டும் என்பதையும் அவர் வரிசைப்படுத்துகின்றார்.

தமிழ்ப் புலம்பெயர் தரப்புகள் மற்றும் சிங்களப் புலம்பெயர் தரப்புகளின் நியாயமான எதிர்பார்ப்புகளை அவர் அடுக்குகின்றார்கள்.

தமிழர் புலம்பெயர் தரப்புகள் தேசியப் பிரச்சினைகள் தொடர்பாக சில, பல உத்தரவாதங்களை எதிர்பார்க்கின்றன. அதேபோல சிங்களப் புலம்பெயர் தரப்புகள் ஊழல், வீண் விரயமற்ற நிர்வாக முறைமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன.

இந்த இரண்டு தரப்புகளின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையிலும் மையமாக ஓர் இழை ஓடுகின்றது. அதுதான் முக்கியம்.

அது – தேசிய இனப்பிரச்சினையிலிருந்து, அரசியல் நிர்வாகம் வரை அனைத்திலும் உண்மை, நேர்மை, நீதி, மனிதத்துவ மாண்பு, சட்டத்தின் ஆட்சி, ஒளிவு மறைவற்ற வெளிப்படையான தன்மை, பொறுப்புக் கூறல் போன்றவை கட்டாயம் என்பதுதான் அது. இனி நடக்கப் போகின்ற விடயங்களுக்கு மட்டுமல்ல, கடந்த காலத்தை ஒட்டியும் இவை அவசியம்.

அப்படி உண்மையாக நடக்கவும், செயலாற்றவும், விசேடமாக தென்னிலங்கை பௌத்த, சிங்களம் உட்பட முழு நாடும் தயாரா? தயார் என்றால் மட்டுமே மனோ கணேசன் பிரேரிக்கும் இந்த தனித்துவத் திட்டம் பெற்றி பெறமுடியும்.

# ஜனாதிபதி ரணிலுடன் ஒப்பிடக்கூடிய தலைவர்கள் உலகில் எங்கும் இலர்!

## அவர் தேசிய சொத்து என வஜிர அபேவர்தன பெருமிதம்

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 2020 ஆம் ஆண்டு கிராமம், கிராமாக விநியோகம் செய்த கொள்கை அறிக்கையை மக்கள் அன்று குப்பையில் தூக்கி எறியாமல் இருந்திருப்பார்களானால், தற்போது நாடு இப்படிக் குப்பைக் கூடைக்குள் விழுந்திருக்காது என அந்தக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அன்று ஐக்கிய தேசியக் கட்சி விநியோகித்த கொள்கை அறிக்கையை மீண்டும் தெளிவான புத்தியுடன் வாசித்துப் பார்க்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

அன்று மக்கள் தெளிந்த புத்தியுடன் அதனை வாசித்துப் புரிந்துக்கொண்டு தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பார்களானால், தற்போது ஆசியாவில் உச்சமான இடத்தில் இருந்திருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் ஒப்பிடக்கூடிய தலைவர் எவரும் உலகில் இலர். அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக் கொண்டு ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினால், நாட்டை நிச்சயமாக மீட்டெடுக்க முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியவற்றை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார். இதனால், ஜனாதிபதி மீதான நம்பிக்கை நொடிப் பொழுதில் அதிகரித்து வருகிறது.

ரணில் விக்ரமசிங்க நாட்டின் தேசிய சொத்து, இலங்கையை ஆசியாவில் உயர்ந்த இடத்துக்குத் தூக்கி வைப்பதற்காக அந்தத் தேசிய சொத்தைப் பிரயோசனப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வஜிர அபேவர்தன மேலும் கூறியுள்ளார்.

# உயிருக்குப் போராடிய விமானிகளை காப்பாற்றிய மூன்று இலங்கையர்கள்

## தென்கொரியாவில் சம்பவம்



தென் கொரியாவில் இடம்பெற்ற விமான விபத்தின் போது மூன்று இலங்கையர்கள் விமானகளைக் காப்பாற்றியுள்ளனர்.

கொரிய விமானப் படைக்குச் சொந்தமான எவ் – 4ஈ என்ற போர் விமானம் விபத்துக்குள்ளாகி நொறுங்கியுள்ளது.

சியோலில் இருந்து 40 கிலோமீற்றர் தெற்கில் உள்ள ஜியோங்கோக் துறைமுகத்துக்கு தெற்கே 9 கிலோமீற்றர் தொலைவில் கடந்த வெள்ளிக்கிழமை கடலில் இது விழுந்தது. எனினும் அதில் பயணித்த இரண்டு பேர் பரசூட் மூலம் கடலில் குதித்தனர்.

இதன்போது அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த மூன்று இலங்கையர்கள் உட்பட குழுவினர் அவர்களை காப்பாற்றியுள்ளனர்.

தங்கள் ஜெட் விமானத்தில் இயந்திரத்தில் ஏற்பட்ட தீ விபத்தை அடுத்து, பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கடலோரப் பகுதியை நோக்கிப் பாதையை மாற்றி விட்டு சென்றதாக கொரிய விமானப்படை தெரிவித்துள்ளது.

# விமான ரிக்கெட் கட்டணங்களும் இலங்கையில் அதிகரிக்கப்பட்டன!

இலங்கையில் விமான ரிக்கெட் கட்டணம் உச்சக்கட்ட அதிகரிப்பை சந்தித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

விமான ரிக்கெட் கட்டணம் அமெரிக்க டொலருக்கு நிகராக அறிவிக்கப்படுதல், கட்டுநாயக்க விமான நிலையத்தினுள் விமானங்களுக்காக டர்பைன் எரிபொருள் தட்டுப்பாடு, விமான நிலைய கட்டண அதிகரிப்பு போன்ற பல காரணங்கள் இவ்வாறு விமான ரிக்கெட் அதிகரிப்பிற்குக் காரணமாகியுள்ளன.

இதன் காரணமாக இலங்கைக்கு வரும் விமானங்களின் எண்ணிக்கை சுமார் 60 சதவீதம் குறைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலைமை இலங்கையில் உள்ள சுற்றுலாத் துறையையும், இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்குத் தொழிலுக்குச் செல்லும் மக்களையும் மோசமாகப் பாதித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

### சிங்கப்பூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தற்போது தாய்லாந்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி, அந்நாட்டிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதற்கு தாய்லாந்து அரசாங்கத்திடம் அனுமதி கோரிய போதிலும், இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அவர் தங்கியிருக்கும் ஹோட்டல் வளாகத்தை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என தாய்லாந்து அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர் எனத் தாய்லாந்தின் 'பாங்கொக் போஸ்ட்' செய்தித்தாள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் மின்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ளன.

தொழில்நுட்ப செயலணியானது குறைபாட்டை கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதற்கட்ட பணிகளை மீளமைக்க சுமார் இரண்டு வாரங்கள் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டமும் பராமரிப்பு பணிகள் காரணமாக முடக்கப்பட்டு மூன்றாம் கட்டம் மட்டுமே தற்போது இயங்கி வருகிறது.

இதன்படி, நுரைச்சோலை அனல்மின் நிலையம் தேசிய மின்கட்டமைப்புக்கு 270 மெகாவாட் கொள்ளளவை மட்டுமே வழங்குகிறது.

எவ்வாறாயினும் யுகதனவி மற்றும் ஏனைய எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் மூலம் மின்சார விநியோகத்தை முகாமைத்துவப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

### நேருக்கு நேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடையொன்றில் வைத்து பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞனின் பிரேத பரிசோதனை களுபோவில போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

விபத்து இடம்பெற்ற போது பல காட்சிகள் கைத்தொலைபேசி ஒன்றில் பதிவாகியுள்ளன என்றும் கூறப்பட்டது.

# ஆஸி – இந்திய பொருளாதார ஒப்பந்தம் பல உலக நாடுகளுக்கு முன்னுதாரணம்




ஆஸ்திரேலியா – இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக உடன்படிக்கை (பிரபலமான சுருக்கமான சிளீவீபு என்று அது அழைக்கப்படுகின்றது. அதற்குக் காராணம் அந்த ஆங்கில எழுத்து உச்சரிப்பின் ஹிந்தி வார்த்தையின் அர்த்தம் 'ஒற்றுமை' என்பதாகும்.) இப்போது பல தரப்புகளாலும் அதிகம் மெச்சப்படுகின்றது.

அந்த ஒப்பந்தத்தை மாதிரியாகக் அதே போன்ற வர்த்தக உடன்படிக்கை ஒன்றை இந்தியாவுடன் செய்து கொள்ள முயற்சிக்குமாறு வட அமெரிக்க நாடான கனடாவின் அரசாங்கத்தை கனடாவின் வணிக கவுன்சில் வலியுறுத்தியுள்ளதாக சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியா – இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக உடன்படிக்கை (ECTA) இந்தியாவுடன் வணிக உறவுகளை கட்டியெழுப்புவதற்கான சிறந்த உதாரணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என கனடா வணிக அமைப்பு ஓர் அறிக்கையில் வாதிட்டுள்ளது. 140 கோடி மக்களுடன் தற்போது உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரம் இந்தியாவினுடையது.

எதிர்காலத்தில் உலகின் மிகவும் சக்திவாய்ந்த உலகளாவிய அரசியல் தளமான இந்தோ – பசிபிக் பகுதிக்குள் கனடாவிற்கு இத்தகைய வர்த்தக ஒப்பந்தம் சிறந்த ஊடுருவலாக இருக்கும் என்றும் அது பரிந்துரைத்துள்ளது.

ஆஸ்திரேலியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் ஒவ்வொரு அர்த்தத்திலும் வரலாற்று சிறப்புமிக்கது – 2011 இல் ஜப்பானுடன் ஒரு தசாப்தத்திற்கும் முன்னர் இந்தியா மேற்கொண்ட முதல் வெற்றிகரமான பேச்சுவார்த்தை மற்றும் உடன்பாட்டுக்குப் பின்னர் இதுதான் அந்த வகையில் அடுத்தது.



இந்தோ – பசிபிக் பகுதியில் சீன அபிலாஷைகளை எதிர்கொள்வதற்காக அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட குவாட் அமைப்பின் பங்காளிகள் தங்களுக்கு இடையில் உறவை வலுப்படுத்தவும், ஒருவருக்கொருவர் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இந்தகைய உடன்படிக்கை ஏற்பாடு வழி செய்கிறது. அனுமதிக்கிறது.

பல நாடுகளின் வர்த்தக ஒப்பந்தமான பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மை (RCEP) மற்றும் பட்டி மற்றும் பாதைத் திட்டம் (பெல்ட் அண்ட் ரோடு) ஆகிய சீனா தலைமையிலான இரண்டு முக்கிய முயற்சிகளின் ஒரு பகுதியாக செயற்பட இந்தியா மறுத்துள்ளதால், அத்தகைய ஆஸி – இந்தியா இடையிலான ஒப்பந்தம் போன்றவை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

உயரமான இமயமலையை எல்லையாகக் கொண்டமையினால் அதனை ஒட்டிய – இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான – எல்லைப் பதற்றங்கள் கடினமான நீடித்த பேச்சுவார்த்தைகளுடன் தொடர்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில், உலகின் மிகப்பெரிய சந்தைகள், உற்பத்தியாளர்கள், திறமைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப இலக்குகள் ஆகியவற்றை ஒருங்கு சேரக் கொண்ட ஒன்றான இந்தியாவுடன் எவ்வாறு திறம்பட ஈடுபடுவது என்பதுதான் கேள்வி. சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி, அந்நிய நேரடி முதலீடு மற்றும் உலகிலேயே மிக அதிகமாக டிஜிற்றல் நிதி பரிவர்த்தனைகள் ஆகியவற்றில் இந்தியா சாதனை படைத்து வருகிறது. எனவே, இந்தியாவுடன் திறம்பட வர்த்தகம் செய்வது நவீன புவிசார் அரசியலில் முக்கியமான பணியாகும்.

இதை எப்படி இலக்குடன் அடையலாம் என்பதையும் இந்திய – ஆஸி ஒப்பந்தம் காட்டுகிறது.

இந்த ஒப்பந்தம் ஆஸ்திரேலியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே ஐந்து ஆண்டுகளில் வர்த்தகத்தை இரட்டிப்பாக்க முயல்வது மட்டுமல்லாமல், புதிய மூலோபாய பரிமாணங்களையும் (வணிகம் மட்டுமல்ல) ஒரு பெரிய நாட்டுடனான உறவுகள் பற்றிய தீர்க்கதரிசனத்துடன் முன்னெடுக்க அனுமதிக்கிறது.

இந்தியாவை அரசியல் சிக்கல்கள் எதுவும் இல்லாமல் அணுகி உடன்பட முடியும். உதாரணமாக, உக்ரைன் நெருக்கடி மற்றும் ரஷ்ய பிரச்சினையில் இந்தியாவிலிருந்து வேறு பட்ட நிலைப்பாட்டை ஆஸ்திரேலியா கொண் டிருந்தது. ஆனால் ரஷ்யா இந்தியாவின் நீண்டகால பங்காளியாக இருப்பதால், இரு நாடுகளும் இந்நெருக்கடிகளுக்கு தனிப்பட்ட அணுகுமுறைகளை உருவாக்கிக் கைக் கொள்ள அனுமதித்தது. மரியாதைக்குரிய இந்த நிலைப்பாடு ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா இடையே இருதரப்பு உறவுகளின் எழுச்சியைப் பங்கப்படுத்தாமலும் பார்த்துக் கொண்டது.

இத்தகைய ஒப்பந்தங்கள் பரந்த ஒத்துழைப்புக்கு வழிவகுக்கும் என்பதும் தெளிவாகிறது, உதாரணமாக, இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் இப்போது திரைப்படங்களின் கூட்டுத் தயாரிப்பை ஊக்குவிக்கும் திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன, மேலும் ஆஸ் திரேலியா இந்திய மாணவர்களுக்கான மிகப் பெரிய உதவித் தொகை திட்டத்தை அறிவித்துள் ளது.

கனடாவின் வணிகக் கவுன்ஸில் விசேடமாகச் சுட்டிக் காட்டும் அத்தகைய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம், மூலோபாய மற்றும் பொருளாதார வழிகளில் முக்கியமான பங்காளியான இந்தியாவுடன் உறவுகளை உருவாக்குவதற்கான மிகச் சிறந்த பாதைகளில் ஒன்றாகும். அத்தகைய ஒப்பந்தம், கூட்டணிகள் மற்றும் அவர்களுக்குள் இருக்கும் புவிசார் அரசியல் விசுவாசத்தின் மாறுதல் அடிப்படைகளுக்கு அப்பால் வணிகம் செய்வதற்கான இடத்தையும் வாய்ப்பையும் உருவாக்குகிறது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி தைவானுக்கு விஜயம் செய்த பின்னர், அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்து வருவதால், உலக ஒழுங்கின் எதிர்காலத்தில் இந்தோ – பசிபிக்கின் மையத்தன்மை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

நாடுகளுக்கு இடையிலான தனிப்பட்ட உறவுகளை வளர்த்துக்கொள்வதில் உத்வேகம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான பெரும் 'துண்டிப்பு' உலக விநியோகச் சங்கிலிகளை முன்னோடியில்லாத வேகத்தில் மாற்றியுள்ளது. மேலும் இந்தியா பணத்திற்கும் விநியோகச் சங்கிலிகளுக்கும் இடையில் ஓர் ஒழுங்கைச மாற்றீடு செய்வதற்கான இயற்கையான வீடாக உள்ளது.

நாடுகள் தனித்துவமான மற்றும் சாதகமான இந்தோ – பசிபிக் உத்திகளை உருவாக்க விரும்புகின்றன. இதைச் செய்வதற்கான சக்திவாய்ந்த வழிகளில் ஒன்று, உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரம், உலகின் மிகப்பெரிய இராணுவங்களில் ஒன்று மற்றும் தொழில்நுட்ப திறமை மற்றும் வளங்கள் நிறைந்த உலகளாவிய மையமான இந்தியாவுடன் முக்கியமான உறவுகளை உருவாக்குவதாகும்.

இந்தியா – ஆஸ்திரேலியா சிளீவீபு ஒப்பந்தம் தற்போதைய உலகளாவிய சூழ்நிலையில் இந்தியாவுடன் வெற்றிகரமான நிச்சயதார்த்தத்திற்கான ஒரு வகையான வரைபடத்தை வழங்கியுள்ளது. அதன் முக்கியத்துவம் அந்த விதிமுறைகளில் தீர்மானிக்கப்பட வேண்டும். மேலும் இதுபோன்ற பேச்சுவார்த்தைகள் மேசையில் மேலும் பல விடயங்கள் வரும் என்று எதிர்பார்க்கலாம்.






# யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் 76 ஆவது சுதந்திரத்தின கொண்டாட்டம்!





இந்தியாவின் 76 ஆவது சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் கொடியேற்றப்பட்டு கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இந்தியாவின் தேசியக்கொடியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஏற்றிவைத்தார்.

சுதந்திர இந்தியாவின் 75 ஆண்டுகள் பூர்த்தியாகி 76 ஆவது சுதந்திர தினத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கொடியேற்றப்பட்டு கொண்டாடப்பட்டது.

இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார். இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## 15 லட்சம் ரூபா பெறுமதியிலான தங்கநகைகளுடன் ஒருவர் கைது

காலி – ஹல்பதொட்ட பகுதியில் மீட்டியகொட பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவான தங்க நகைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய கடந்த 2 ஆம் திகதி மீட்டியகொட – அளுத்வல பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து திருடப்பட்டிருந்த சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது, 8 தங்க வளையல்கள், 5 கழுத்தணிகள், 3 மோதிரங்கள், 3 ஜோடி காதணிகள் மற்றும் 4 கையடக்கத் தொலைபேசிகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேகநபர் 31 வயதுடையவர் என்றும் பத்தேகமவில் உள்ள அடகு நிலையம் ஒன்றில் இரண்டு தங்க நகைகளை அடகு வைத்துள்ளார் என்றும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபர் பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தில் மேலும் சில நபர்கள் தொடர்பட்டுள்ளனரா? என்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொது கடனின் அளவு அதிகரிப்பு!

இலங்கை பொது கடனின் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 104.6 வீதமாக அதிகரித்துள்ளது.

2018-2022 ஆம் ஆண்டுக்கான நிதி முகாமைத்துவம் மற்றும் பொது கடன் கட்டுப்பாடு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையின் விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

டிசெம்பர் 31, 2019ஆம் திகதி வரை காணப்பட்ட மொத்த 86.8 வீத பொது கடன், கடந்த 2 ஆண்டுகளில் 17.8 வீத வலுவான வளர்ச்சியைக் காண்பிப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து, கடன் தர மதிப்பீட்டு நிறுவனங்களால் கடன் மதிப்பீடுகளைப் படிப்படியாகக் குறைப்பது தொடர்பான நிலைமையைத் தணிப்பதற்கு மத்திய வங்கி அல்லது நிதி அமைச்சு போதுமான அக்கறை எடுக்கவில்லை அல்லது போதுமான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தனிநபர் கடனின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 257 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாலத்தை புனரமைத்துத் தருமாறுகோரி அக்கரப்பத்தனை மக்கள் போராட்டம்!

அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட உட்லெக் தோட்டத்துக்கு செல்லும் பிரதான பாலத்தை புனரமைத்துத் தருமாறு தெரிவித்து, தோட்ட மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட பலகைகளால் ஆன பாலம் புதுப்பிக்கப்பட்டு, இரும்பால் ஆன இரண்டரை அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட பாலம் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது.

எனினும், கடும்மழையின்போதுவெள்ளத்தால் பாலம் மூழ்குவதுடன், மழைக் காலங்களில் பாலத்தைக் கடக்க முடியாதவாறு பாலம் பழுதடைந்து காணப்படுவதாகப் பிரதேச வாசிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு, மலையக அரசியல்வாதிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை எவரும் இதனைப் புனரமைத்துக் கொடுக்க முன்வரவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்தே, தங்களின் இந்தப் பிரச்சி னைக்கு உடனடித் தீர்வொன்றை வழங்குமாறு பிரதேச வாசிகளால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

## 2500 பொருள்களின் இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்குப் பரிந்துரை?

அத்தியாவசியமற்ற பொருளகளின் இறக்குமதியை மேலும் மட்டுப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கி நிதியமைச்சிற்கு அறிவித்துள்ளது.

நாட்டின் டொலர் பற்றாக்குறை மேலும் மோசமடையக்கூடும் என்பதாலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வெளிநாட்டு கையிருப்பின் தாக்கம் எதிர்காலத்தில் தொடர்ந்து மோசமாக இருக்கும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளை உடனடியாகச் சீர்செய்ய வேண்டும் என மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது.

எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு டொலரைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதால், அத்தியாவசியமற்ற அனைத்துப் பொருள்களின் இறக்குமதியும் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதற்கமைய அத்தியாவசியமற்ற பொருள்களின் மூன்று பட்டியல்களை மத்திய வங்கி நிதியமைச்சிற்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பட்டியலில் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட அத்தியாவசியமற்ற பொருள்கள் அடங்கியுள்ளன எனக் கூறப்படுகிறது.

## சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாதநிலையில் வைத்தியசாலைகள்!

நாடளாவியரீதியிலுள்ளவைத்தியசாலைகளில் மீண்டும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அலுத்கே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை காரணமாக வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப் படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே எதிர்வரும் காலங்களில் அத்தியாவசிய மருந்துகளை களஞ்சியப் படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர் தமிழர் அமைப்புகள்மீதான தடைநீக்கம் சர்வதேசத்தை ஏமாற்றும் தந்திர விளையாட்டாகும்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சாட்டை

தனது தடைப்பட்டியலில் இருந்து புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை நீக்கம் செய்வதும், நீடிப்பதும் என்பதான அதன் நடத்தை எண்ணிக்கை இலக்கங்களுடன் சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு வேடிக்கை தந்திர விளையாட்டையே வெளிப்படுத்தி வருகின்றது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிபந்தனைகளின் 1373 இன் கீழ், இலங்கைக்குள் 577 நபர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, 18 அமைப்புக்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 316 பேருக்கான தடை நீக்கப்பட்டுள்ளதுடன், 6 புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையும் நீக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 13 ஆம் திகதியன்று, இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஐ.நா. மனித உரிமைச்சபை கூட்டத் தொடர் உரையில், 'ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை எண்.1 இன் கீழ் 2012 ஆம் ஆண்டு தடைவிதிக்கப்பட்ட தனிநபர்கள், அமைப்புக்கள் தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்படுவதோடு, தற்போது 318 தனிநபர்கள் மற்றும் 4 அமைப்புக்கள் தடைப்பட்டியலில் இருந்து நீக்க முன்மொழியப்பட்டுள்ளன எனத் தெரிவித்திருந்தார்.

தற்போது, அடுத்த சில வாரங்களின் ஐ.நா. மனித உரிமைச்சபைக் கூட்டத்தொடர் ஆரம்பிக்க இருக்கின்ற நிலையில் மற்றுமொரு பட்டியல் வெளிவந்துள்ளது. இது சர்வதேசத்தை ஏமாற்றும் வேடிக்கையும் இலக்கையின் தந்திர விளையாட்டையே வெளிக்காட்டுகின்றது.

2014 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம், 424 தனிநபர்கள் மற்றும் 16 அமைப்புக்களை 'பயங்கரவாத பட்டியலிட்டு' தடைவித்தது. 2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்த புதிய அரசாங்கம் மீண்டும் எண்ணிக்கை இலக்க வேடிக்கை விளையாட்டாக 8 அமைப்புக்களையும், 259 தனிநபர்களையும் புனிதர்களாக்கித் தனது தடைப் பட்டியலில் இருந்து நீக்கியது.

மீண்டும் 2021 இல் புதிய அரசாங்கம் தனது எண்ணிக்கை இலக்க வேடிக்கை விளையாட்டைக் காட்டியது. 380 தனிநபர்களையும் மற்றும் 7 அமைப்புக்களையும் பயங்கரவாதத் தடைப்பட்டியலில் இட்டுக்கொண்டதென எமது முன்னைய அறிக்கையொன்றில் குறிப்பிட் டிருந்தோம்.

தற்போது வெளிவந்துள்ள புதிய பட்டியல், இலங்கையின் வேடிக்கை இலக்க தந்திர விளையாட்டை மீளவும் தொடர்வதை வெளிக்காட்டுகின்றது.

குறிப்பாக இலங்கையின் இந்த நடத்தை 2012 ஆம் ஆண்டு ஐ.நா ஒழுங்குமுறை இலக்கம் 1ஐ, இலங்கை துஸ்பிரயோகம் செய்வதை நிரூபிக்கின்றது. ஐ.நாவின் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

இதேவேளை, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மீது தொடரும் தடை, 'தமிழீழம்' என்ற கொள்கை, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் உறுதியுடனும் செயற்படுகின்றோம் என்பதைச் சான்று பகிர்வதாகவே இலங்கையின் இந்த அச்சம் வெளிப்படுத்துகின்றது.

இலங்கைக்கு வெளியே 'தமிழீழத்துக்காக' நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் போன்றவர்கள் இன்னும் போராடும் செயற்பாட்டில் உள்ளனர் என்ற இலங்கை இராணுவத்தளபதியின் சமீபத்திய கருத்தும் இதனையே வெளிப்படுத்துகின்றது. – என அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக பாப்பரசரிடமிருந்து ஒரு லட்சம் யூரோ நன்கொடை

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக ஒரு லட்சம் யூரோக்களை பாப்பரசர் பிரான்ஸிஸ் வழங்கியுள்ளார்.

இலங்கை மதிப்பில் 3 கோடியே 60 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான குறித்த நன்கொடைப் பணத்தை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கட்டுவாப்பிட்டி மற்றும் கொச்சிக்கடை தேவாலயங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்த குடும்பங்களுக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

மேலும் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்த குடும்பங்களுக்கு 30 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

# இறக்குமதி செய்யப்பட்ட உணவு பொருள்களின் விலை குறைப்பு; நாடு முழுவதும் சோதனைகள்!

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை குறைக்கப்பட்ட நிலையில் அந்த விலையில் விற்பனை இடம்பெறுகின்றனவா என்பதைக் கண்டறிய நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் சோதனைகளை மேற்கொள்ள நுகர்வோர் விவகார அதிகாரசபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மொத்த விற்பனையாளர்களுக்குத் தற்போது திறந்த கணக்குகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன் மூலம், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையில் சிறிது குறைவு ஏற்பட்டது.

பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் அந்த நன்மையை நுகர்வோருக்கு அளிக்கிறார்களா என்பதைக் கண்டறியவே இந்த சோதனைகள் நடத்தப்படுகின்றன.

# விவசாயிகளுக்கு பிரச்சினைகளின்றி எரிபொருளை வழங்குவதில் கவனம்!

நெல் அறுவடையின் போது, விவசாயிகளுக்குப் பிரச்சினையின்றி எரிபொருளை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் –

விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பூச்சிகொல்லிகள் மற்றும் களைகொல்லிகளின் ஏகபோகத்தை வரும் பருவத்தில் இருந்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# ரயில் பயணசீட்டு 7 ஆயிரத்து 300 ரூபாவுக்கு வெளிநாட்டு தம்பதிகளுக்கு விற்றவர் கைது!

கண்டி ரயில் நிலையத்தில் வெளிநாட்டுத் தம்பதியருக்கு ரயில் பயணச்சீட்டை அதிக விலைக்கு விற்பனை செய்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2 ஆயிரத்து 600 ரூபா பயணச்சீட்டை 7 ஆயிரத்து 300 ரூபாவிற்கு சந்தேகநபர் விற்பனை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் இந்தப் பயணச்சீட்டை விற்பனை செய்து கொண்டிருந்த போது, ரயில் பாதுகாப்பு அதிகாரிகள் அவரைக் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி நபரிடம் இருந்து மற்றொரு முன்பதிவு செய்யப்பட்ட ரயில்வே பாஸ் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

64 வயதான சந்தேகநபரை கண்டி நீதிவானிடம் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நீதிபதிகள் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் அரச அதிகாரிகள் தொடர்புகொள்வதை தவிர்க்குக!

## அமைச்சு செயலர்கள், துறைத்தலைவர்களுக்கு அறிவுறுத்து

நீதித்துறை செயற்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் அரச அதிகாரிகள், நீதிபதிகள் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதைத் தவிர்க்குமாறு அமைச்சக செயலாளர்கள் மற்றும் துறைத்தலைவர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.

இதற்கமைய அமைச்சக செயலாளர்கள், மாகாணங்களில் உள்ள தலைமை செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்டவர்களுக்கு அடுத்த வாரம் இது தொடர்பில் சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.

வழமையான விடயங்கள் தொடர்பில் அவர்கள் சட்டமா அதிபருடன் தொடர்பு கொள்ள முடியும், ஆனால் ஏனைய விடயங்கள் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாகவே தெரிவிக்கப்பட வேண்டும்.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுடனான வழக்கமான தொடர்புகள் மேற்கொள்ளப்படக்கூடாது.

நீதித்துறை விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தடுக்க இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமைச்சின் செயலாளர் ஒருவர் பிரதம நீதியரசருக்கு நேரடியாகக் கடிதம் எழுதிய சம்பவம் ஒன்றும் இந்த முடிவை எடுப்பதில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டதாக அரசாங்கத் தரப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச உத்தியோகத்தரின் கவிதை ஊடான முறைப்பாடு அமைச்சின் செயலாளர் கவிதையால் முன்வைத்த பதில்!

இலங்கையின் பொது நிர்வாக அமைச்சு, அரசாங்க பணியாளர்களுக்கு வெள்ளிக்கிழமையை விடுமுறை தினமாக அறிவித்து, வீட்டுத்தோட்டங்களில் ஈடுபடுவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் எரிபொருள் நிலைமை மேம்பட்டதால், நிர்வாகம் முழுமையாகச் செயற்பட வேண்டும் என்று அரசாங்கம் விரும்பியதால், வெள்ளிக்கிழமை விடுமுறை திரும்பப் பெறப்பட்டது.

இந்தநிலையில் ஓர் அரசாங்கப் பணியாளர், இந்தப் புதிய முடிவைப் பற்றி வெளிப்படையாக மகிழ்ச்சியடையவில்லை, தனது வீட்டுத் தோட்டத்தில் செடிகள் வளர ஆரம்பித்துவிட்டன எனவும், அதிக வாழ்க்கைச் செலவு காரணமாக வேலைக்குச் செல்வது கடினமாக இருப்பதாகவும் ஒரு கவிதை எழுதியுள்ளார்.

கீழ்மட்ட அரசாங்கப் பணியாளர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் மூத்த அதிகாரிகளுக்குத் தெரியவில்லை என்றும் அவர் தமது கவிதையில் வேதனை தெரிவித்திருந்தார்.

அவரது கவிதையைப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே பார்வையிட்டுள்ளமையுடன், உடனே அவரும் தனது சொந்தக் கவிதை மூலம் மேற்படி அரச பணியாளருக்குப் பதிலளிக்க முடிவு செய்துள்ளார்.

அதில், போதிய மழை பெய்து பயிர்கள் நன்றாக வளரும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், முறையிட்டவர் தனது திறமையைக் கருத்தில் கொண்டு பொருத்தமான வேலையைக் கண்டுபிடித்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வேலைக்கு வரலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கப் பணியாளர்கள், தங்கள் வேலையில் இருந்து தற்காலிக விடுப்பு எடுப்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள விருப்பத்தை அமைச்சின் செயலாளர் தமது கவிதையில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முழு நாடாளுமன்றுமே ரணிலின் விரல்நுனியில் இருக்கும்போது தமிழ் மக்களுக்கான தீர்வை அவரால் முன்வைக்க முடியுமா?

## கஜேந்திரகுமார் எம்.பி. கேள்வி



2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் அதிகாரத்துக்கு வந்த அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழர்களுக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைத்து அதைத் தந்திரமாகப் பின்வாங்குவதற்காக அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதும் பின்னர் விடுதலைப் புலிகள் மீதும் பழியைப் போட்டு தப்பித்தார். இப்போது முழு நாடாளுமன்றமும் அவரது விரல் நுனியில் உள்ளது. அவர் ஜனாதிபதி என்ற நிறைவேற்றதிகாரத்தை அடைந்துவிட்டார். எமது கட்சியையும் இன்னும் ஓரிருவரையும் தவிர்த்து அனைவரும் அவரது சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்குகின்றார்கள். இந்நிலையில் அவர் தமிழ் மக்களுக்கான உரிய தீர்வை முன்வைப்பது இலகுவாக முடியும். ஆனால், இதயசுத்தியுடன் அவர் செயற்படுவாரா?

– இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் கூறப்பட்ட விடயங்களில் எங்களுக்கு மிகுந்த கரிசனைக்குரியனவற்றுக்குச் செல்கிறேன். அவரது உரையில் ஓரிடத்தில் வடக்கு – கிழக்கு தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தமையை நீங்கள் அறிவீர்கள். அவரது உரையின் இறுதிப்பகுதியில் ஒரு பந்தியில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'தமிழ்ச் சமூகத்தினர் நீண்ட காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசியற் தீர்வு காண்பதும் அவசியமாகிறது. யுத்தம் காரணமாக அவர்கள் பல சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். வடக்கின் பொருண்மிய மேம்பாட்டு விடயத்தில் நாங்கள் புதிய வழிமுறைகளைச் சிந்திக்க வேண்டும். இலங்கையை மீள்கட்டுமானம் செய்யும் வேலைத் திட்டத்துக்கு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதன் மூலம் அவர்களின் ஆதரவைப் பெறமுடியும் என நம்புகிறோம். அவர்களது வருகையையும், தமது தாய் நாட்டில் அவர்களது முதலீடுகளையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

என்பதாக ஜனாதிபதியின் உரையில் வடக்கு – கிழக்கு வாழ் தமிழர்கள் தொடர்பாக இந்தவொரு குறிப்பை மட்டுமே காணமுடிந்தது.

நான் எனது கருத்துக்களை மேற்குறித்த விடயத்திலிருந்து ஆரம்பிக்கிறேன், மிக நீண்ட காலத்துக்கு முன்பு அல்ல, 2001ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி பெரும்பான்மையைப் பெற்றிருந்தது. விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி குமாரதுங்க ஜனாதிபதியாகத் தொடர்ந்தார். அப்போது ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். சமாதான நடவடிக்கைகள் என அழைக்கப்பட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. விடுதலைப்புலிகளுடனான பேச்சுகளில் ஒஸ்லோ பரிவர்த்தனை அறியப்பட்ட உடன்பாடு எட்டப்பட்டது.

அவைத்தலைவர் இவற்றை அறிவார் என நம்புகிறேன். உங்களுடைய முன்னைய தொழில்களில் ஒன்றாக அந்தக் காலகட்டத்தில் நீங்கள் பேர்கோவ் பவுண்டேசன் அமைப்பில் பணிபுரிந்தீர்கள். அப்போதுதான் முதற்தடவையாக நான் உங்களைச் சந்தித்தேன்.

அந்தப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு ஒஸ்லோ பரிவர்த்தனை வெளியானபோது அந்தப் பரிவர்த்தனையில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கும் நாட்டிலிருந்த நடைபெற்று வந்த விடயங்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்பட்டது. இதுவிடயத்தில் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் கரிசனையிருந்தது. நான் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருந்தேன்.

சமஷ்டி முறையைப் பரிசீலிப்பதாக ஒரு பரிவர்த்தனையுடன் விக்கிரமசிங்க உடன்பட்டிருந்தாலும் நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் அதற்கு நேரெதிராக அமைந்திருந்தன. நிலைமையை வழமைக்கு கொண்டு வருவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அப்போது அரசாங்கத்துடன் முரண்பட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதியைக் குற்றஞ்சாட்டி தப்பித்துக்கொள்ளும் அணுகுமுறையே அவரால் கையாளப்பட்டது.

அரசகட்டமைப்பை ஒரு சமஷ்டி முறையாக மாற்றுவது தொடர்பில் அரசுக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ எந்த அக்கறையும் இருப்பதை நாட்டு நிலைவரங்கள் வெளிக்காட்டவில்லை. உண்மையில் ஒரு மாற்றத்துக்கு அவர்கள் தயாராக இருந்திருந்தால் நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும்.

ஆனால் அரசாங்கம் வேறுவிதமான பரப்புரைகளை மேற்கொண்டுவந்தது. வசதியாக பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்தித் தப்பிக்கொண்டது. அதன் நீட்சியாக பழி தமிழ் மக்கள் மீதும் போடப்பட்டது. தமிழர்களே சமஷ்டித்தீர்வு விடயத்தில் அக்கறை கொள்ளவில்லை என பழிசுமத்தப்பட்டது. இவ்விதம் சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்கும் தெரிவிக்கப்பட்டது. தமிழர்கள் இதில் அக்கறையில்லாது இருக்கிறார்கள். அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்துகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டது.

அந்நேரத்தில் அவருடன் முரண்பட்டுக்கொண்டிருந்த அப்போதைய ஜனாதிபதியைக் காரணங்காட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதிலிருந்து தப்பியிருக்கலாம். ஆனால் இன்று நிலைமை முழுமையாக மாற்றமடைந்துள்ளது. அவர் மிக முக்கியமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக உள்ளதால் முழு நாடும் அவரது விரல் நுனியில் இருக்கிறது. எங்களது கட்சியையும் வேறும் ஒருசிலரையும் தவிர மிகுதி உறுப்பினர்கள் அவருடன் இணைந்து பணிபுரியத் தயாராக இருக்கிறார்கள். அவருக்கு இந்த அவையின் முழு ஆதரவு இருக்கிறது. 2020 இலிருந்து இந்தநாட்டை சீர்குலைத்துவரும் இந்த அரசாங்கம் தங்களைப் பிணையெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவில் தங்கியிருக்கிறது. இந்தநாடாளுமன்றம் ரணில் விக்கிரமசிங்கவில் தங்கியிருக்கிறது.

விக்கிரமசிங்க தான் இணங்கிய ஒஸ்லோ பரிவர்த்தனைக்கு நேர்மையானவராக இருப்பின் அந்தவிடயத்தை மீள எடுக்கலாம். இந்தச் சபை மூலமாக அதனைச் சாதிக்கலாம். இந்தச்சபை மூலமாக முழு நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்தவற்றைக் கூறி, அவர்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும். சமஷ்டி முறைமை பிரிவினையல்ல என்பதைத் தெரிவிக்கலாம். ஆனால் அதற்கு நேரெதிராக, இம்முறைமைய ஜனநாயகத்தைப் பேணுவதற்கும், இந்தச் சபையை பொறுப்புக்கூற வைப்பதற்கும் அது உதவும். சமஷ்டி முறைமை, முறையான தலைவர்களை உருவாக்க உதவும். இவற்றை அவர் தெரிவித்திருக்கலாம். ஆனால் விக்கிரமசிங்க அதுபற்றி ஒரு வார்த்தையைத்தானும் கூறவில்லை. அதற்கு மாறாக அவர் தன்னை ஒருசிறிலங்கனாகவும், சிறிலங்கன் என்ற அடையாளத்தை வேண்டுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அவர் குறிப்பிடும் சிறிலங்கன் அடையாளம் என்பது ஏனைய அடையாளங்களை மறுதலிப்பதாக அமைந்திருக்கிறது மற்றைய அடையாளங்களைப் பிளவுகளாக அவர் கருதுகிறார். எங்களுக்கிடையிலான வேறுபட்ட அடையாளங்களை மறந்துவிடுமாறு கூறுகிறார். மாறுபட்ட அடையாளங்கள் இலங்கையை பலவீனப்படுத்துவதாக அவர் கூறுகிறார். உண்மையாகவே 2001 – 2002 காலப்பகுதியில் அவர் கொண்டதாகக் கூறிய நிலைப்பாடும். சர்வவல்லமை கொண்ட ஜனாதிபதியாக அவர் இப்போது கூறுவதும் நேரெதிரான நிலைப்பாடுகள். இவை இரண்டும் ஒன்றாக இருக்கமுடியாது. இவற்றில் உண்மையான விக்கிரமசிங்க யார்?

இந்த விடயத்தில் நம்பகத்தன்மை தொடர்பில் பாரிய பிரச்சினையிருக்கிறது. இதனையே தமிழர்கள் தொடர்ந்து கேள்வியெழுப்பி வருகிறார்கள். எது எப்படியிருப்பினும், இறுதியில் அவர் எவ்வாறு இந்நாட்டின் ஜனாதிபதியானார் என்பதைப் பிரதிபலிக்க வேண்டியவராக உள்ளார். போராட்டம் சில சமயங்களில் வன்முறையைப்பட்டதாக இருந்தது உண்மைதான். ஆனால் அதனை அவர் இப்போது பயங்கரவாதம் என்றும் அழைக்கிறார். அவர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தபோது இந்தப் போராட்டத்தை அவர் பயங்கரவாதம் என அழைக்கவில்லை. மாறாக, மக்கள் போராட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என திரும்பத்திரும்பக் கூறியிருந்தார்.

நான்,இதற்கு முன்னரும் ஒரு தடவை கூறியிருந்தேன், 'ஒரு வன்முறையற்ற போராட்டம் வன்முறையற்ற வகையில் முன்னெடுக்கப்படும்போது, முழு நாடும் மாற்றம் அவசியம் என்று கூறும்போது ஏனெனில் இந்தப்போராட்டத்தின் நோக்கமே மக்கள் தாம் வழங்கிய ஆணையைத் திரும்பிப்பெறுவதாக இருக்கிறது. மக்கள் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற விரும்புவதை முழு உலகமும் அறியும். அவர்கள் புதிய ஆணையைக் கோருவதற்குக் காரணம் தாம் நம்பிக்கை இழந்த இந்த அவையை கலைத்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அவையை அமைப்பதற்காகும். நீங்கள் அதற்கு வழிவிடுவதில்லை என முடிவு செய்துள்ளீர்கள். மாறாக , நிலைமையை உங்களுக்கு ஏற்றவகையில் கையாண்டு ஜனாதிபதி எனும் இந் நிலைக்கு உயர்ந்துள்ளீர்கள்.

அப்படியாக பதவிக்கு வந்த பின்னர், எந்த வழிமுறையில் நீங்கள் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தீர்களோ அந்த வழிமுறையையே பயங்கரவாதம் என்றும் வன்முறை என்றும் வர்ணிக்கிறீர்கள். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு நடந்துகொள்வதற்குக் காரணம் ஆளும் கட்சியினருக்கு அவர் கடமைப்பட்டவராக இருப்பதேயாகும். அவர் பொதுசன முன்னணிக்கு கடமைப்பட்டவராக இருக்கிறார். இந்த நாடாளுமன்றம் ஜனநாயகமற்ற முறையில் வழங்கிய தீர்ப்புக்கு – பதவிக்கு – கட்டுப்பட்டவராக இருக்கிறார். மக்களின் குரலை நசுக்கி அதனைப் பூச்சியத்துக்கு கொண்டு வருவதன் மூலம் அந்தக் கட்சியினருக்கு தனது நன்றியறிதலை வெளிப்படுத்துவதே இப்போது அவருக்குள்ள ஒரே வழியாக இருக்கிறது. அதனையே அவர் செய்கிறார்.

இந்த காரணங்களாலேயே நாம் கூறுகின்றோம். உடனடியாக அவசரகால சட்டத்தை நீக்கி கைதுசெய்து அடைக்கப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் அல்லாவிடின் நீங்கள் அழைப்பு விடுத்திருக்கின்ற சர்வகட்சி அரசு என்பது உங்கள் பதவியையும் அதிகாரத்தையும் பாதுகாக்கும் ஒரு நாடகம் என்றே எமது கட்சியின் உறுதியான நிலைப்பாடாகும். – என்றார்.

# மட்டு. கராத்தே போட்டியில் 26 பதக்கம் பெற்று சாதனை!




மட்டக்களப்பு மாவட்ட கராத்தே போட்டியில் பெற்றி கராத்தே கழகம் 26 பதக்கங்களைப் பெற்று மாவட்டத்தில் சாதனை படைத்துள்ளதாக பெற்றி கராத்தே கழகத்தின் கராத்தே அணியின் தலைவர் ஆர்.கௌசீகன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கராத்தே கழகங்களுக்கு இடையிலான போட்டி நடைபெற்ற நிலையில் அதில் பங்குபற்றிய வீரர்களைக் கௌரவிக்கும் வகையிலான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பெற்றி கராத்தே கழகத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

பெற்றி கராத்தே கழகத்தின் தலைவர் மதனின் தலைமையில் கீழ் பிரதான பயிற்றுவிப்பாளர் சில்வாவின் வழிகாட்டலின் கீழ் பெற்றி கராத்தே கல்லூரியில் பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்கீழ் விளையாட்டுத்துறை அமைச்சால் தேசிய விளையாட்டு நிகழ்வுக்கு இணைவாக மாவட்ட மட்டத்தில் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்ட மட்ட கராத்தே போட்டியில் பெற்றி கராத்தே கழகம் சார்பில் 17 வீரர்கள் பல்வேறு ரக கராத்தே போட்டிகளில் கலந்துகொண்டமையுடன் 26 பதக்கங்களைச் சுவீகரித்து சாதனை படைத்துள்ளனர்.

இதில் 16 தங்கப்பதக்கங்களும் நான்கு வெள்ளிப்பதக்கங்களும் 06 வெண்கல பதக்கங்களும்பெறப்பட்டுள்ளன என பெற்றி கராத்தே கழகத்தின் கராத்தே அணியின் தலைவர் ஆர். கௌசீகன் தெரிவித்துள்ளார்.

பெற்றி கராத்தே கழகத்தின் கராத்தே கழகம் தொடர்ச்சியாக பல்வேறு தேசிய மட்ட சாதனையாளர்களை உருவாக்கிவருவதாகவும் தொடர்ச்சியாக இரண்டு வீரர்கள் தேசிய அணியில் சாதனை படைத்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-94

**இந்திய கட்டமைப்புகளின் குறுகிய பார்வை**

பல சமயங்களில் தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் யதார்த்தங்களில் இருந்து பாதைகளை அணுகாமல், தங்களது பக்கத்து நியாயங்களிலேயே காய்களை நகர்த்தப் பிடிவாதம் பிடிப்பது உண்டு. அதில் அவர்கள் இடைக்கால கட்டுமானங்களுக்காவது சிலவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்து லட்சிய சுடரை – அதாவது தமிழ் ஈழம் என்ற இறைமையுள்ள அமைப்பை – நோக்கி நகரவே அடம்பிடித்தமைதான் வழமையாக இருந்தது.

அந்தக் குறுகிய பார்வையில், அவர்களுக்கு ஸ்ரீலங்கா அரசை அடிபணிய வைக்கும் முயற்சிகளில் இருந்த தடைகற்களை புரிந்து கொள்ள முடியவில்லை. அதில் நர்த்தனம் ஆடிக்கொண்டிருந்த நவக்கிரகங்களின் உலாக்களை கவனித்தாலும் அவற்றைக் கணித்த அவர்களின் ஜோதிடர்களின் தப்புகள், தவறுகள் பெருவாரியான நன்மைகளைத் தரவில்லை.

சனீஸ்வரனையும் செவ்வாயையும் ராகு கேதுவையும் திட்டுபவர்கள் உண்டு. பயம் காட்டுபவர்களும் உண்டு. நான் வளர்ந்தகாலங்களில், பின் குடிபெயர்ந்து இன்று நம் பேரர்களை வளர்க்கும் நாள்களிலும், நமது தாய் சுற்றம் கற்றுத் தந்த பாடங்களைத்தான் படித்துக் கடைப்பிடிக்கிறோம். சனீஸ்வரனோ, செவ்வாயோ, ராகு ,கேது ,வியாழன் எதுவோ அவர்களது பார்வைகளால் நன்மை தராது துன்பம் தந்தால், பொறுமை காத்து, விரதங்கள் இருந்து, அந்தக் காலத்தைக் கடக்க வேண்டும். அதனைக் கடந்த பின் அவர்களின் அனுக்கிரகங்களில் நன்மை அடைய வேண்டும் என்று எங்களுக்குப் புத்தி சொல்லுவார்கள். என்னைப் போலவே நாட்டிலும் புலம்பெயரிலும் உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளை இவ்வடிகளில்தான் வளர்ப்பார்கள்.

ஆனால் அன்று விடுதலைப் புலிகள் முட்டுக்கட்டையாய் நின்ற நவக்கிரகங்களைச் சிறிதும் பொறுமையுடன் அணுகாமல், அனுசரிக்காமல், எல்லா விக்கிரகங்களையும் உடைத்து, எரிந்து இந்தச் சாத்திரங்களைத் திருத்தி அமைப்போம் என்று புறப்பட, தமிழ் மக்கள் அதற்குவாளா இருந்தி பார்த்திருந்தமையும், புலம்பெயர் பகுதிகளோ 'அடி, உடை, நாங்கள் இருக்கிறோம்' என உசுப்பேத்தியதும் ஒரு சாபக்கேடாக மாறியதோ என்னவோ....!

விடுதலைப் புலிகளுடன் முரண்பாடுகள், அவர்கள் ஒத்துழைப்பார்களா என்று சந்தேகங்கங்கள், அச்சங்கங்கள், அதேபோன்ற முரண்பாடுகளுடன் உளவுத் தகவல்கள் வந்த போது இந்தியத் தரப்பின் கட்டமைப்புகள் கூட ஒப்பந்தத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ள விடுதலைப் புலிகளை அழித்தோ, ஓரங்கட்டவோ வேண்டுமென்ற ஒரு குறுகிய நோக்கிலும், தனித் தமிழீழம் அமைக்க வேண்டும் என்ற லட்சியத்திற்கு சமாதி கட்டப்பட வேண்டும் என்ற தூர நோக்கிலும் செயற்பட்டார்கள்.

இந்தப் பார்வைகளில் அவர்களுக்கு நாட்டில் – இந்தியாவில் – புலம்பெயரில் – இருந்த தமிழ் மக்கள் யாவருமே பிரிவினைக்கு ஆதரவுதந்தவர்களாகவே தெரிந்தார்கள். விடுதலைப் புலிகளின் அங்கத்தினர்கள், ஆதரவாளர்கள், அரசியல் கோரிக்கைகளுக்காக போராடியவர்கள் என்று பகுத்துப் பார்க்கும் எண்ணப்பாங்கு இருக்கவில்லை.

சென்னையிலும் மதுரையிலும் இயங்கிய தமிழர் தகவல் நிலைய அமைப்புகளும் அதன் பணியாளர்களும் கவனிப்புக்கு ஆளாகினர். அங்கு உதவிகளுக்குச் சென்ற புலம்பெயர்



அமைப்பினர் கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஒப்பந்த ஆக்கத்தில் தமிழர் தகவல் நிலையத்தின் அச்சாணியாக இயங்கிய கந்தசாமி, வண. பிதா ஜேம்ஸ்போன்றபலர்வடக்கு,கிழக்குக்குத் திரும்பி பாரிய மறுவாழ்வுத் திட்டங்களை நடத்தப் பெருதொகையான நிதிகளுக்கான உறுதிமொழிகளோடு புறப்பட்டு, தமிழர் தகவல் நிலையத்தின் இயக்கம் ஒரு முழுமையான அலுவலக அமைப்புகளுடன் லண்டனில் தேவையற்றது என அதை மூடிவிட்டு, சென்னையில் இயங்குவதையும் காலப்போக்கில் கைவிடலாம், நாட்டிலிருந்து பணிபுரிவது முக்கியம் என்ற தீர்மானங்கள் எட்டப்பட, கந்தசாமி தாயகம் வரும் வழியில் தமிழகத்தில் இவற்றை சிவநாயகத்துடன் கலந்துரையாடி, அவரும் சில மாதங்கள் பொறுத்து தாயகம் திரும்புவதற்கு ஒத்துக் கொண்டிருந்தார்.

**மஞ்சள் காமாலை பார்வைகள்**

இடையில் லண்டனில் தமிழர் தகவல் நிலையத்தின் கையிருப்பில் இருந்த பெருமளவு ஆவணங்கள் கொள்கலன்களில் அடைத்து சென்னை தமிழர் தகவல் நிலையத்துக்கு அனுப்பப்பட, அவை ஆயுதங்களாக இருக்கலாம் என்ற மஞ்சள் காமாலை பார்வையில் அந்தக் கொள்கலன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. எவ்வளவு பிரயாசைகளின் பின்பும் அவற்றுக்கு நடந்த விதத்தில், எது விதத் தகவலும் அதனை ஏற்றுமதி செய்த லண்டன் அலுவலத்துக்கோ அன்றில் அதனைத் தமிழகத்தில் பெற்றுக் கொள்ள இருந்தவர்கள் என முகவரியிடப்பட்ட சென்னை அலுவலகத்துக்கோ கொடுக்கப்படவில்லை. அவை பிரிவினையை, விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் ஆவணங்கள் என்று அபிப்பிராயங்களே தரப்பட்டன.

கண் வைத்துத் தமிழ் கட்டமைப்புக்களைத் துருவிக் கொண்டிருந்த புலன் விசாரணையாளர்கள், றோ, தமிழ் நாட்டின் புலனாய்வு பிரிவுகள், 1991இல் ராஜீவ் காந்தியின் கொலையுடன் தமிழர் தகவல்நிலையத்தையும்நிர்மூலப்படுத்தி, சிவநாயகத்தை இந்திய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து தடுப்பு காவலில் ஒரு வருடம் வைத்திருந்தனர். ஸ்ரீலங்காவை போலவே அவருக்கு எதிராக எந்த குற்றப் பத்திரமும் பதிவு செய்யப்படவில்லை. அவருக்காக வழக்குகளுக்கு மேல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, பலத்த செலவுகளுக்கும் ஆதரவுகளுக்கும் இடையில் அவர் பிணையில் விடப்பட்ட போது, அது மருத்துவ காரணங்களுக்காக மட்டுமே என்று அமைந்தது. ஆறு மாதங்கள் சென்னை, வேலூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக இருந்த போதும், தமிழ்நாட்டு புலன்விசாரணையாளர்கள் அவரை கட்டிலோடு சங்கிலியால் பிணைத்து வைத்துத்தான் பராமரித்தார்கள். எவ்வளவோ இந்திய ஊடகங்களுக்கும், பல கட்டமைப்புகளுக்கும், அவர்களின்கொள்கைவகுப்புகளுக்காக ஸ்ரீலங்காவின் அரசியல் மற்றும் வடக்கு, கிழக்கு நிலைமைகள் பற்றிய தகவல்களுக்கான ஊற்றாக இருந்தவர் நடத்தப்பட்ட விதமும், அவற்றின் மனோபாவங்களும், அதுவரையில் கட்சி, குழுக்கள் எனப் பக்கச் சார்பில்லாமல் ஆக்கங்கள் செய்து கொண்டு இருந்த அவரையே இந்தியாவை கண்டிக்கவும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை ஏற்று ஆதரிக்கவும் வைத்தன. அவர் போன்று பக்கச் சார்பில்லாமல் உரிமைகளுக்காக, வன்முறையற்ற விதங்களில் போராடிய பலர் நடத்தப்பட்ட விதங்களிலேயே எவ்வளவோ தமிழ் மக்கள் இந்தியாவின்பால் கோபங்களும் ஆதங்கங்களும் கொண்டு அதிருப்தி மிக்கவர்களானார்கள். அவற்றின் நேசங்களும் உறவுகளும் விரிந்தன.

சிவநாயகத்துக்கும் தமிழர் தகவல் நிலையத்துடன் இணைந்து பணியாற்றியவர்களுக்கும் ஆதரவாகக் கருத்து தெரிவித்த பலர் றோ போன்ற தேசிய கட்டமைப்புகளிலும் பார்க்க, தமிழ் நாட்டின் புலன் விசாரணையாளர்களாலேயே 'ஜெயிலுக்குள் போடுவோம்' என பயப்படுத்தப்பட்டார்கள்.


இந்தியாவின் இப்படியான போக்குகளால்தான் நாட்டில் மட்டுமல்ல, புலம்பெயரில் கூட தமிழ் மக்களிடையே விரக்திகள் இருந்தன. இவற்றை உணர்ந்து கொள்ளாமல் புலிகள் தாங்களும் சஞ்சலம் தருகின்ற நவக்கிரகங்களை தங்களது இராணுவத்தால் அடக்கி அழித்து விடுவோம் என்ற அதிகாரப்பார்வை எதிர்வித அமைதிக்கும் வழி வகுக்க வில்லை. பாலசிங்கமும் பிரேமதாஸா கொடுத்த ஆதரவுக்கரத்தை அவரது வசதிக்கோ விடுதலைப் புலிகளின் வசதிகோ பிடித்தார்.

விடுதலைப் புலிகளின் பேரில் இருக்கக்கூடிய மஞ்சள்காமாலைபார்வையால் இன்னும் அதற்காக தமிழ் மக்கள் யாவரையும் உள்ளடக்கி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால் அவர்களுக்கு நம்பிக்கைகள் தராமல், வாய் சம்பிரதாயங்கள் வைத்து, அவற்றால் சிங்களப் பேராண்மையைத் திருப்திப்படுத்திக் காரியங்கள் பெறலாம் என இந்தியா நினைத்தால், அவர்கள் படிக்கும் பாடங்களை, மகாவம்சத்தையோ, அன்றில் அறகலயவில் சொல்லப்பட்ட தார்மீகங்களையோ, ஜே.வி.பி. போன்றவற்றின் தீவிர இடதுசாரி சோசலிச கட்சிகளின் நிலைப்பாடுகளையோ 'கசடற கற்க'வில்லை என்பது தான் யதார்த்தம்.

சிவநாயகத்தைப் பற்றிய தெளிவுபடுத்தல்களுக்காக தமிழ் மக்களது பொறாமைகள், அகங்காரங்கள் அவை தரும் நன்மையற்ற போக்குகளையும் சிறிது நோக்குவதற்காக பின்வினவற்றைக் குறிக்கிறேன்.

சிவநாயகத்தைத் தடுப்பில் வைப்பதற்கு இந்திய அமைப்புகள் முன்வைத்த காரணங்களில் முதன்மையானது அவர் நாட்டுக்கு ஆவணங்களின்றி நுழைந்தார் என்பதும், அவரது எழுத்துக்களும் நடவடிக்கைகளும் பிரிவினையையும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருவதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைகிறது என்பவைதான்.

இந்தியாவிலிருந்து வெளியேறிய அவருக்கு உதவி அளிக்கப்பட்ட புலம்பெயர் நன்கொடையில் முகவர் மூலம் ஆப்பிரிக்க நாடுகளில் வருடக் கணக்கில் அகதியாகச் சுற்றித் திரிந்தபின், பிரான்ஸ் நாட்டுக்குள் புகுந்து தஞ்சம் கோரி, அங்கிருந்த புலம்பெயர் ஆதரவாளர்களின் கட்டமைப்புகளோடு இயங்கிய பின், அவர் லண்டனுக்கு அழைத்து வரப்பட்டு, Hot Spring என்ற சஞ்சிகையை நடத்தி, அவர் எழுத்தாக்கங்களைப் பொறுத்தவரை 'தங்களுக்கு தாளம் போட வேண்டும்' என்பதற்கு இணங்காமல் போக, லண்டனில் அவரது அலுவலகம் அவர் பிரான்ஸுக்குச் சென்றபோது உடைக்கப்பட்டு, அவரது பேனாவுடன் அவரை வெளியேற்றினார்கள். அவர்கள் புலம்பெயரில் ஆணித்தரமானவர்கள். இவற்றைத் தனது 'பேனாவும் துப்பாக்கியும்' என்ற நூலில் அவர் குறித்துள்ளார். ஒரு கணம் மூச்சை வாங்கிவிட்டுப் பார்த்தால் தமிழ் மக்களது போக்குகளிலோ பார்வைகளிலோ நடத்தைகளிலோ வித்தியாசம் இருக்கவில்லை. யதார்த்தங்க




ளும் தென்படவில்லை தங்களது மூர்க்கம் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைகள்தான் காட்டப்பட்டன.

பின் சிவநாயகம் நாடு திரும்பி கொழும்பில் 29 நவம்பர் 2010 பல நோய்களுக்கு ஆள்பட்ட நிலையில் இறந்தார்.

பிரான்ஸில் இருந்த போது நோர்வே சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்காக அந்த காலங்களில் அங்கு சென்ற தமிழ்ச்செல்வன், புலித்தேவன், கருணா மற்றும் பலர் அவரைச் சந்தித்து, வன்னிக்குத் திரும்பி, தங்களோடு பணியாற்றுமாறு கேட்டனர். உடல்நிலைகளும் எல்லா பகுதியினருடனுமான அனுபவங்களும் அவரை அதற்கு உடன்பட விடவில்லை.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் நவீன வடிவங்களில் அடிமைத்துவம் தொடர்கின்றதாம்!

## ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா கூறுகிறார்

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அடிமைத்துவத்தின் நவீன வடிவங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் மூலம் இலங்கையில் இன்னமும் நவீன வடிவங்களில் அடிமைத்துவம் தொடர்வதைப் புரிந்துகொள்ளமுடிவதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா, உள்ளூராட்சி மற்றும் தேசிய மட்டத்திலான முக்கிய கட்டமைப்புக்களுக்கு பெருமளவில் சிறுபான்மை சமூகத்தைச்சேர்ந்த தலைவர்களை நியமித்தல், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதைத் தவிர்த்தல் உள்ளடங்கலாக அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டிய 46 பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்திருந்த அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா, அரசாங்கத்தின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப்பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பெருந்தோட்டத்தொழிலாளர்கள், சுதந்திர வர்த்தக வலயப்பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்து நாட்டின் நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்தமையுடன் மதிப்பீடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

நாட்டில் சுமார் ஒருவாரகாலம் (நவம்பர் 26 – 2021 – டிசெம்பர் 3 – 2021) தங்கியிருந்த அவர், தனது அவதானிப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய ஆரம்ப அறிக்கையொன்றை ஏற்கனவே வெளியிட்டிருந்ததுடன் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அறிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் குறிப்பாகப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகங்கொடுத்திருக்கும் அடிமைத்துவத்தின் நவீன வடிவங்கள் தொடர்பில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அறிக்கையில் விரிவாக சுட்டிக்காட்டியிருக்கும் ஐ.நா. விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா, அரசின் முக்கிய கட்டமைப்புக்கள் மற்றும் பணியிடங்கள் மிகையான அளவில் இராணுவமயமாக்கப்படலும் அதன்விளைவாக சிவில் சமூக இடைவெளியில் ஏற்பட்டுள்ள தாக்கங்களும், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகளுக்கு எதிராக அதிகரித்துவரும் அடக்குமுறைகளும் கண்காணிப்புக்களும், தொழிலாளர்நிலை தொடர்பான செயற்திறன் மிக்க கண்காணிப்பு இன்மை, தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு உரியவாறு நீதியையும் தீர்வையும் பெற்றுக்கொள்ளமுடியாமை, தொழிலாளர் உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் முறையாக அமுல்படுத்தப்படாமை, தொழிற்படை தொடர்பாக உரியவாறு தகவல்கள் பேணப்படாமை ஆகிய விடயங்கள் தொடர்பிலும் விசேடமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

'அடிமைத்துவத்தின் நவீன வடிவங்களைத் தடுப்பதற்கென இலங்கை சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. முக்கிய சர்வதேசப்பிரகடனங்கள் சிலவற்றை அமுல்படுத்தல், தற்போது அரசாங்கம் மேற்கொண்டுவரும் சட்டத்திருத்தங்களுடன் இணைந்ததாக சிறுவர் தொழிலாளர்கள் இல்லாத வலயங்களை உருவாக்கல் போன்ற நடவடிக்கைகள் பாராட்டப்படவேண்டியவையாகும்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அடிமைத்துவத்தின் நவீன வடிவங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் மூலம் இலங்கையில் இன்னமும் நவீன வடிவங்களில் அடிமைத்துவம் தொடர்வதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அத்தோடு கௌரவமான தொழில் மற்றும் அதற்கு உகந்தவாறான எவ்வித ஒடுக்குமுறைகளுமற்ற வேலைச்சூழல் என்பவற்றை உறுதிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்' என்று ஐ.நா. விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா அவரது இறுதி அறிக்கையில் வலியுறுத்தியிருக்கின்றார்.



இவ்வாறானதொரு பின்னணியில் வேலைவாய்ப்பிற்காகப் புலம்பெயர்தல் தொடர்பான பிரகடனம், தனியார் வேலைவாய்ப்பு முகவரகப் பிரகடனம், தொழிலாளர் பிரகடனம், வன்முறைகள் மற்றும் அத்துமீறல் பிரகடனம் உள்ளிட்ட தொழிலாளர் உரிமைகளுடன் தொடர்புடைய பிரகடனங்களை அமுல்படுத்தல், அனைத்துத் தொழிலாளர்களுக்கும் எவ்வித ஒடுக்குமுறைகளுமற்ற சமத்துவமான வேலைச்சூழலை உறுதிசெய்யும் வகையில் தொழில்புரிவதற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், அதிக நிதி மற்றும் மனிதவள ஒதுக்கீட்டின் மூலம் தொழிலாளர் கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தல், மீளச்செலுத்தும் இயலுமைக்கு ஏற்றவாறான கடன்வழங்கல் தொடர்பில் வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்தல், உள்ளூராட்சி மற்றும் தேசிய மட்டத்திலான முக்கிய கட்டமைப்புக்களுக்கு பெருமளவில் சிறுபான்மை சமூகத்தைச்சேர்ந்த தலைவர்களை நியமித்தல், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதைத் தவிர்த்தல் உள்ளடங்கலாக அரசாங்கம் நடைமுறைப்படுத்தவேண்டிய 46 பரிந்துரைகளையும் ஐ.நா. விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா அவரது இறுதி அறிக்கையில் உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் தடை நீக்கம் தேசிய அமைப்புகளின் சம்மேளனங்கள் எதிர்ப்பு!

புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் தடை நீக்கம் தொடர்பாக அரசாங்கத்தின் அறிவிப்பு வெளியாகியுள்ள தருணம் எங்களுக்கு கவலையளிக்கின்றது என அந்த சம்மேளனங்களின் சார்பில் குணதாச அமரசேகர கருத்து தெரிவித்துள்ளார்.

அவரது கருத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளை அடிப்படையாக வைத்து இவ்வாறான நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியாது என கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கம் கொண்ட நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்பிற்குப் பாதிப்பை ஏற்படுத்த முடியாது எனப் குறிப்பிட்டுள்ள அவர், சில புலம்பெயர் அமைப்புகள் தனிநபர்கள் மீதான தடையை நீக்குவதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை தொடர்பாக வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



சமீபத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தங்களுடைய வேண்டுகோள்கள் தொடர்பில் பல வாக்குறுதிகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்திருந்தார், தடைநீக்கமும் அந்த வாக்குறுதிகளில் ஒன்றா என குணதாச அமரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

# நான்கு கால்களுடன் யாழில் கோழிக்குஞ்சு



யாழ்.அச்சுவேலி – காலானை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கோழிக்குஞ்சு ஒன்று நான்கு கால்களுடன் பிறந்துள்ளது.

கோழி வளர்ப்பை ஜீவனோபாயமாகக் கொண்ட வீடொன்றில் ஆறு கோழிக் குஞ்சுகள் பொரித்த நிலையில், அதில் ஒன்று நான்கு கால்களுடன் பிறந்துள்ளது.

ஏனைய கோழிக் குஞ்சுகளைப் போல இந்தக் கோழிக்குஞ்சும் சுறுசுறுப்பாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கோழிக்குஞ்சை பிரதேசத்தில் உள்ள மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிளில் செல்லும்போது செல்பி எடுக்க முயன்றதால் விபத்து

யாழ்ப்பாணம், ஒக.16

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் தொலைபேசியில் செல்பி எடுப்பதற்கு முற்பட்டு மாட்டு டன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்த வேளையில் கையடக்கத் தொலைபேசியில் செல்பி எடுப்பதற்கு முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறுக்கே வந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் இதனை அடுத்து இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் மஹதிவுல்வெள பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் வவுனியா – பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 மட்டும் 30 வயது உடையவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள் ளனர். மேலும், விபத்து தொடர்பிலான விசாரணைகளை மொரவெள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2022இல் வெளியிடப்பெற்றது.